பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு மார்கழி மீ 06 உ வெள்ளிக்கிழமை (21-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 25

### மக்களின் உயிர், உடைமைகளைக் காப்பாற்றுமாறு

# ஸ்ரீலங்கா அரசை வற்புறுத்த ஐம்பது நாடுகளில் இயக்கம்

### சர்வதேச நல்லொழுக்க ஸ்தாபனம் ஏற்பாடு

லண்டன், டிசம்பர் 21

தனது எல்லா பிரசைகளினதும் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய தனது கடமையைச் சரிவரச் செய்யுமாறு இலங்கை அரசை வற்புறுத்தும் வகையில், ஐம்பது உலக நாடுகளில் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச நல்லொழுக்க ஸ்தாபனம் (I.O.G.T) உலக நாடுகளில் உள்ள தனது கிளைகள் மூலம் இந்த இயக்கத்தை நடத்தும்.

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் அதிகமாக இலங்கையில் ''போரூட்'' நிறுவனம் ஊடாக அபிவிருத்தித் திட்டங்களை இந்த அமைப்பு செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

''இலங்கையின் இப்போதைய சோகமயமான நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து, தமிழர் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கு, சர்வதேச சமூகம் முயற்சி செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது.

எனவே, இலங்கை அரசுடனும், சம்பந்தப்பட்ட ஏனைய தரப்புகளுடனும் தொடர்பு கொண்டு, தமிழர் பிரச்சினைக்கு அமைதியான, அரசியல் தீர்வு காண்பதற்கு உரி

[2 ஆம் பக்கம் பார்க்க]

## புத்தூரில் ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், டிச. 21

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் புத்தூர் சந்தியில் ஹெலிக்கொப்டர் ஒன்று நடத்திய தாக்குதலில் சைக்கிள்கள் சில சேதமுற்றன. [உ]

## கிளிநொச்சியிலும்

யாழ்ப்பாணம், டிச. 21

நேற்று முன் தினம் காலை 7-30மணியளவில் கிளிநொச்சி 155 ஆம் கட்டையில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்குதல்களை நடத்தியது.

சேத விவரம் தெரிய வரவில்லை. [உ]

## 3 ஆம் தவணை விடுமுறை நாளை

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் அனைத்தும் மூன்றாம் தவணை விடுமுறைக்காக நாளை சனிக்கிழமை [22 ஆம் திகதி] மூடப்படுகின்றன.

மீண்டும் முதலாம் தவணைக்காக எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி பாடசாலைகள் திறக்கப்படும். [உ-6]

## குரும்பசிட்டிப் பகுதியில் 2 சிப்பாய்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிச. 21

குரும்பசிட்டிப் பகுதியில் காவல் அரண்களை அமைக்க முயன்ற படையினர் மீது நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவினர் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 3 பேர் படுகாயமடைந்தனர்,

விடுதலைப் புலிகளின் செய்தி குறிப்பு ஒன்று இவ்வாறு தெரிவித்தது. (ஒ-5)

## கிழக்கில் பெரும் தாக்குதலை நடத்த அரசு முஸ்தீபு!

கொழும்பு, டிச. 21

கிழக்கு மாகாணத்தில், அரசுப் படைகள் பெரும் தாக்குதலை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அறிய வருகிறது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக கிழக்கில் சில பகுதிகளில் கடும் விமானத் தாக்குதல்களும், கடல்வழித் தாக்குதல்களும் தொடங்கி இருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன,

இப்பகுதிகளில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் அந்தச் செய்திகள் மேலும் கூறின. (ஒ-5)

## திருமலை நகரப் பகுதியில் 5 தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், டிச. 21

கடந்த செவ்வாயன்று திருகோணமலை நகரப் பகுதியில் -சமாதுப் பிள்ளையார் கோவில் பகுதியில்- ஆண், பெண், குழந்தைகள் உட்பட 5 தமிழ்ப் பொது மக்கள் ஸ்ரீலங்காப் படையினரால் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர் என்றும்-

பின்னர் அவர்களின் சடலங்கள் டயர் போட்டு எரிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## காங்கேசனில் பொருள்களை இறக்க அனுமதியுடன் லொறிகள் செல்லலாம்

யாழ்ப்பாணம், டிச. !!

கொழும்பிலிருந்து கப்பல்கள் காங்கேசன் துறையில் உள்ள துறைமுகத்துக்கும் வரும். அது சம்பந்தமாக இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டன. இப்போது ஏற்பாடுகள் நடைபெறுகின்றது.

அனேகமாக அடுத்த வாரத்தில் கப்பல் ஒன்று காங்கேசன் துறைமுகம் வந்தடையும் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறிய வந்தது;

கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கு அங்கிருந்தே தொழிலாளர்கள் கூட்டிவரப்படுவர்.

துறைமுகத்திலிருந்து பொருள்களை ஏற்றி வருவதற்கென லொறிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அனுமதிப் பத்திரத்துடன் செல்லும் லொறிகள் மட்டுமே பொருள்களை ஏற்றி வர முடியும் என்றும் —

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் வேண்டிய பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வர் என்றும் — பிரஸ்தாப வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் 'குமண' கப்பலே அடுத்த வாரமளவில் காங்கேசன்துறைவரலாம்என வும்எதிர்பார்க்கப்படுகிறது.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## வலைப்பாடு துறைக்கும் கப்பல்கள் வரும்!

யாழ்ப்பாணம், டிச. 21

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் கப்பல் மூலம் கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சிக்குரிய பொருள்களை வலைப்பாடு இறங்கு துறையில் இறக்குவதற்கான சாத்தியங்கள் குறித்து இப்போது பரிசீலனை செய்யப்படுகிறது.

வலைப்பாடு இறங்குதுறையைப் பார்வையிடுவதற்காகச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி, கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் மற்றும் வீதி அதிகார சபை அதிகாரிகளுடன் கடந்த வாரம் அங்கு சென்றனர்.

இறங்குதுறையில் மேற்கொள்ளவேண்டிய திருத்த வேலைகள் குறித்து ஆராயப்பட்டு இரண்டு வாரங்களில் திருத்த வேலைகளை முடித்துத் தருவதாக வீதி அதிகார சபை அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

திருத்த வேலைகள் முடிந்ததும் கப்பல்களை அங்கு தருவிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என அறியப்படுகிறது. [அ-3]

## விசேட அலவன்ஸ் அதிகரிப்பு; திங்கள் சுற்றுநிருபம் வந்தது!

யாழ்ப்பாணம், டிச. 21

கடந்த நவம்பர் மாதம் அரசினால் அறிவிக்கப்பட்ட - அரச ஊழியர்களுக்கான விசேட அலவன்ஸ் பற்றிய சுற்று நிருபம் கடந்த திங்கட்கிழமையே யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தது.

2 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட சம்பளம் பெறுபவர்களுக்கு 300 ரூபாவும், 2 ஆயிரம் ரூபாவுக்கும் 3 ஆயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட சம்பளம் பெறுபவர்களுக்கு 200 ரூபாவும் விசேட அலவன்ஸாக வழங்கப்படும் என்று அந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரித்த அலவன்ஸ் கடந்த நவம்பர் முதல் அமுலுக்கு வந்துள்ளது என்பது தெரிந்ததே. [ஒ-5]

## தி.மு.க. அரசை கலைத்தால் தமிழகம் பொங்கி எழும்!

### வி.பி. சிங் எச்சரிக்கை

தி.மு.க. அரசு கலைக்கப்பட்டால் தமிழகம் பொங்கி எழும்.

- இப்படி முன்னாள் பிரதமர் வி.பி. சிங் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

மாநில அரசு கலைக்கப்படும் என் தமிழரட்டலை அலட்சியப்படுத்தி, இலட்சியத்துக்காக தேசிய முன்னணிக்கு தொடர்ந்து திரு. கருணாநிதி ஆதரவு அளித்து வருவதற்கு திரு. சிங் நன்றி தெரிவித்தார். [ஒ-எ]

## முல்லைத்தீவில் குண்டு வீச்சு; ப. நோ. கூ. ச. லொறி சேதம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்காலில் கடந்த செவ்வாயன்று கப்பலில் இருந்து பொருள்களை இறக்கிக்கொண்டிருந்த பொதுமக்கள் மீது ஸ்ரீலங்கா குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல்களினால்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## இயக்கச்சிப் பகுதியிலும் விமானக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், டிச. 21

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிமுதல் 5 மணிவரை இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ந்து குண்டுகளை வீசின.

சேத விவரம் தெரியவரவில்லை.

அதற்கு முன்னர் ஆனையிறவு முகாமிலிருந்து குடியிருப்புகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் பொதுமக்களின் மூன்று வீடுகள் சேதமுற்றன. [உ]

### யாழ். ஆஸ்பத்திரிப் பகுதி

## அடையாள மின் விளக்குகள் இன்றிரவு முதல் ஒளிரும்

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பிரதேசத்திலுள்ள பகுதியில் பொருத்தப்பட்டுள்ள அடையாள விளக்குகளுக்கு இன்று முதல் மின் விநியோகம் வழங்கப்படும்.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## ரெலோ பிரமுகர் மட்டுநகரில் சுட்டுக் கொலையுண்டார்

கொழும்பு, டிச. 21

ரெலோ இயக்கத் தலைவர்களில் ஒருவர் எனக் கூறப்படும் டேவிட் என்பவர் மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்,

மட்டக்களப்பு நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து ஆயுதக்குழு ஒன்றினால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் அவரது மகன் ஒருவரும் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-5]

## ஆனையிறவில் தாக்குதல்; முகாம் கட்டடம் சேதம்

யாழ்ப்பாணம், டிச. 21

நேற்று முன்தினம் ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலில் முகாமிற்குள் இருந்த கட்டடம் ஒன்று சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்டன் சுந்தரிக்கு அஞ்சலி; மக்கள் முன்னணி அறிக்கை

நேற்று முன்தினம் கட்டுவனில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் துணைப் பொதுச் செயலாளர் கப்டன் சுந்தரிக்கும் மற்றும் ஏழு பெண் போராளிகளுக்கும் வீரவணக்கம் செலுத்தி மக்கள் முன்னணி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

1984 ஆம் ஆண்டில் இயக்கத்தில் இணைந்த கப்டன் சுந்தரி இராணுவப் பயிற்சியை முடித்துக்கொண்டபின்னர், 1987 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தென்மராட்சிப் பகுதி மகளிர் அணியின் அரசியல் பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

இந்தியப் படையின் ஆக்கிரமிப்புக் காலத்தில் வன்னியில் எமது பெண் போராளிகளுடன் இணைந்து இந்தியப் படைக்கு எதிராகப் போரிட்டார்.

மக்கள் மத்தியில் சமூக, பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்ட கப்டன் சுந்தரி மக்களை அரசியல் மயப்படுத்தும் கட்சிச் செயற்பாடுகளில் தீவிரமாக பங்குகொண்டிருந்தார்.

சகோதரர்கள் சகிதம் விடுதலைப் போரில் ஈடுபட்ட பல குடும்பங்களில் கப்டன் சுந்தரியின் குடும்பமும் ஒன்றாகும்.

1987 பெப்ரவரியில் கைதடியில் நடந்த சம்பவத்தில் வீரமரணமடைந்த கப்டன் வாசுவும் –

1990 ஆகஸ்டில் அச்சுவேலியில் விமானத் தாக்குதலில் வீரமரணமடைந்த மேஜர் ஜேம்ஸும் இவரின் சகோதரர்கள் ஆவர்.

– இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# யாழ். மாவட்ட ஒய்வூதியரின் 3 மாத வவுச்சர் வரவில்லை!

## கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாத வவுச்சர்கள் கொழும்பில் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தின் காரியாலயத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இது குறித்துத் தெரிய வருவதாவது:-

வவுச்சர்களை எடுத்து வர யாழ் ஓய்வூதியக்கிளை அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றிருந்தார். வவுச்சர்கள் பெறப்பட்டு, கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் அவரால் ஒப்படைக்கப்பட்டன.

கப்பலில் இடம் இல்லை என்று செஞ்சிலுவைச் சங்கம் கைவிரித்துவிட்டது.

அதை அடுத்து யாழ் ஓய்வூதியக்கிளை அதிகாரி அந்த வவுச்சர்களை அத்தியாவசிய சேவைகள் நாயகம் அலுவலகத்தில் ஒப்படைத்திருந்தார்.

கப்பல் போக்குவரத்துச் சிரின்மையால் அவை அத்தியாவசிய சேவைகள் நாயகம் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

3 மாத வவுச்சர்களும் விரைவில் யாழ்ப்பாணம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவை வந்து சேர்ந்ததும் உடனடியாக கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று யாழ். செயலக ஓய்வூதியக்கிளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [ஒ-3]

மீண்டும் யாழ். நகரில்!

தாவரவியல் — திரு பாலா

A/L 90, 91, & 92 வகுப்புக்கள்

ஆரம்பம்; 22 — 12 — 90, Sat 9.00 A. M.

விபரங்களுக்கு:

PERSONAL CLASSES

B. M. C. முன்லேன், யாழ்ப்பாணம்.

(15186)

பயிற்சி வகுப்புக்கள்

ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங்,

Computer Programming, Spoken English

பயிற்சிகள் ஆரம்பம்: 24 — 12 — 90

முன்னர் பயிற்சிபெற்ற மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Technical Institute,

ஸ்ரான்லி வீதி, :-: யாழ்ப்பாணம்.

(றெயில்வே கடவை அருகாமை) (15190)

கண்ணீர் அஞ்சலி

நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையில் வசிக்கும் ஈஸ்வரானந்தன் விக்னேஸ்வரன் 29-11-90 இல் பூநகரியில் அகால மரணமானார் அன்னாரின். ஆத்மா நல்லூர் கந்தன் அடியில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சு கனகரத்தினம் குடும்பத்தினர்

[திருமதி யோகராசா, ஆசிரியை]

547, பருத்தித்துறை வீதி,

நல்லூர். [14866]

# எம். எல். ஏ. மீண்டும் ஜெயலலிதா அணியில்

சென்னை, டிச. 21

திருநாவுக்கரசு தலைமையிலான அ. தி. மு. கவில் சேர்ந்து கொண்ட உப்புலியாபுரம் எம். எல். ஏ திரு. மூக்கன் மீண்டும் ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. கவில் சேர்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அ. தி. மு. க மீண்டும் பிளவு பட்டபோது திரு. மூக்கன் திருநாவுக்கரசு அணியில் சேர்ந்து இருந்தார். (ஒ-எ)

# முரல் மீனால் தாக்கப்பட்டவர் மரணம்!

குருநகர், டிச. 21

கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவரை பெரும் முரல் மீன் ஒன்று பாய்ந்து வந்து தாக்கியது.

படகில் நின்றிருந்த அவர், நெற்றியில் தாக்கப்பட்டு காயமுற்றார். சுய நினைவின்றி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த அந்தத் தொழிலாளி நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

குருநகரைச் சேர்ந்த அகஸ்ரின் ஜெசுதாசன் (40 வயது) என்னும் 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார். (ஒ-15-51)

# மரணமான பொலிஸ் அதிபர் டி.ஐ.ஜி. ஆனார்

யாழ்ப்பாணம், டிச. 21

கடந்த செவ்வாயன்று பன்மதவாச்சியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்த பொலீஸ் அதிபர் றிச்சர்ட் விஜயசேகராவுக்கு நேற்று பதவியுயர்வு வழங்கப்பட்டது

றிச்சர்ட் விஜயசேகராவுக்கு பிரதிப் பொலீஸ் மா அதிபர் [டி. ஐ ஜி.] பதவி வழங்கப் பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் மரணமான இராணுவ பிரிகேடியர், மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்வு பெற்றார் என்பது தெரிந்ததே. [ஒ-5]

# ஆசிரியர்களுக்கு சாரணர் பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். மாவட்ட திரிசாரணர் குழு நல்லூர் பிரிவினர் இன்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சாரணர்களுக்கான ஆரம்பப் பயிற்சி நெறியினை வழங்குகின்றனர்.

இப் பயிற்சி நெறியில் கலாசாலை பயிற்சி ஆசிரியர்கள் பங்குபற்றுகின்றனர். [ஒ 5]

### காங்கேசனில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காங்கேசன் துறையில் பொருள்கள் இறக்கப்படும் அதேவேளை பருத்தித்துறைக்கும் கப்பல்கள் வரும் என்றும் அதேவட்டாரங்கள் தெரிவித்தன. [அ-3]

### முல்லைத்தீவில்....

[2 ஆம் பக்கம் பார்க்க]

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான லொறி ஒன்று சேதமானது.

அப்பகுதியில் கூடியிருந்த மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை. [உ]

### அடையாள ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அந்தப் பகுதிகளில் இருபது இடங்களில் விசேடமாகப் பொருத்தப்பட்டுள்ள "ரியூப் பல்ப்புகள்" இன்றிரவு முதல் ஒளிரும்.

இதற்கான மின் இணைப்பு வேலைகளை யாழ்ப்பாணம் மின்சார சபையினர் செய்திருந்தனர். [ஒ-5]

# பாண்டிச்சேரியில் தி.மு.க. அரசு பெரும்பான்மை பலம் இழப்பு

புதுச்சேரி, டிச.21

ஜனதாதள் எம் எல் ஏக்கள் மூவர் பாண்டிச்சேரி யூனியன் பிரதேச அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, தி. மு. க. முதலமைச்சர் டி. இராமச்சந்திரன் தலைமையிலான அரசு பெரும்பான்மையை இழந்தது.

சட்டசபையில் உள்ள 4 ஜனதா தள் எம். எல். ஏக்களில் மூவர் ஜனதாதள் சந்திரசேகர் பிரிவை ஆரம்பித்ததைத் தொடர்ந்தே இந்த அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

இந்திரா காங்கிரஸுடன் சேர்ந்து கூட்டு அரசு ஒன்றை அமைப்பது பற்றி ஆராயப்படும் என்று ஜனதா தள் [எஸ்] தமிழ்நாடுப் பிரிவுத் தலைவர் பொன். விஜயராகவன் தெரிவித்தார்.

பாண்டிச்சேரி சட்டசபையில் தற்போதைய கட்சி நிலைவரம் வருமாறு;

தி. மு. க. – 9

இந்திரா காங்கிரஸ் - 11

ஜனதா தள் – 01

ஜனதா தள் – 03 (சந்திரசேகர் பிரிவு)

அ. தி. மு. க – 03

இந்தியக் கம்யூனிஸ்ட் – 02

சுயேச்சை – 01

ஜனதா தள் கட்சியின் 4 உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 2 உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் ஒருவர் ஆகியோரின் ஆதரவுடன் தி. மு. க அரசு இங்கு ஆட்சி அமைத்திருந்தது. [உ-எ]

# இலங்கை வென்றது

ஷார்ஜா, டிச. 21

ஷார்ஜா கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை பாகிஸ்தானை 6 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

இந்தப்போட்டியில் பாகிஸ்தான் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 140ஓட்டங்களை எடுத்திருந்தது.

இலங்கை அணி 40ஆவது ஓவரில் 4 விக்கெட்டுகள்இழப்புக்கு 141 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தில் வென்றது.

### ஸ்ரீலங்கா அரசை,.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் நாட்டு அரசைத் தூண்டுங்கள்."

—இவ்வாறு சர்வதேச நல்லொழுக்க ஸ்தாபனத் தலைமையகம், ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள தனது கிளை அலுவலகங்களைக் கேட்டுள்ளது.

தமிழ்ப் பகுதிகளில் இடம் பெறும் அழிவுகளையும் ஏனைய தாக்கங்களையும் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தலைமையகத்துக்கு விரிவாக எடுத்துரைத்திருந்தது.

அதனைத் தொடர்ந்து நல்லொழுக்க ஸ்தாபனத் தலைமையகம், இலங்கைப் பிரச்சினை குறித்து சர்வதேச நாடுகள் சரியாக முழுமையாக உணர்ந்து கொள்வதை இலக்காக வைத்துத் தனது கிளைகளுக்கு நீண்ட அறிவுறுத்தல் ஒன்றை அனுப்பி உள்ளது.

அந்த அறிவுறுத்தலில் முக்கிய பகுதிகள் வருமாறு:-

★ யுத்தம் காரணமாக 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் பட்டினி கிடக்கும் தறுவாயில் உள்ளதாக அறிக்கைகள் கிடைத்துள்ளன.

★ யாழ்ப்பாணக் குடாநாட்டில் மோசமாக விமானத் தாக்குதல்கள் நடப்பதால் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். அங்கு வாழ்பவர்களில் பெரும்பாலானோர் யுத்தப் பிரதேசங்களில் சிக்குண்டுள்ளனர்.

★ இப்போதைய யுத்தத்தில் – பிரச்சினையில் – நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புடைய சகலரையும் வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமாறு எமது ஸ்தாபனம் கேட்டுக்கொள்கிறது.

★ தனது எல்லாப் பிரஜைகளினதும் உயிர்களையும், உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய தனது கடமையை நிறைவேற்றச் செய்யுமாறு இலங்கை அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

# ரஷ்ய வெளியுறவு அமைச்சர் நேற்று திடீர் ராஜினாமா!

மாஸ்கோ, டிச. 21

சோவியத் யூனியனின்வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர் நாட்ஸே நேற்று தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

1985இல் இருந்து வெளியுறவு அமைச்சராகப் பணி புரிந்து வந்த திரு. ஷெவர் நாட்ஸே தனது பதவிவிலகல் முடிவை சோவியத் நாடாளுமன்றத்தில் பேசுகையில் அறிவித்தார்.

சோவியத் யூனியனில் மீண்டும் சர்வாதிகாரம் கால் ஊன்றத் தொடங்கியிருக்கிறது என்றும், அரசியல் சீர்திருத்தம் என்பது கைவிடப்படுகிறது என்றும் திரு. ஷெவர் நாட்ஸே சொன்னார்.

# வானில் பறந்ததோ பருந்து; பயத்தில் ஓடினர் மக்கள்!

தென்மராட்சி, டிச. 21

வானத்தில் அருகருகே இரு பருந்துகள் வட்டமிட்டு, சிராகப்பறந்து கொண்டிருந்தன!

பறந்து கொண்டிருந்த அந்த இரண்டு பருந்துகளையும் பார்த்து பொம்மர்கள் என நினைத்து அபாய சமிக்ஞையாக மணி அடிக்கப்பட்டது.

சந்தையில் நின்றவர்கள் கலவரப்பட்டனர்; திடீர்ப் பதற்றம் அவர்களுக்கு.

மணியோசை காதுகளில் விழுந்ததும் வியாபாரிகள் முதல் அனைவரும் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

எனினும் இரைச்சல் சத்தம் கேட்கவில்லை என உணர்ந்து மீண்டும் வானை உற்று நோக்கிப் பார்த்தனர்.

பருந்துகள் இரண்டும் வானில் வட்டமிட்டு ஒய்யாரமாகப் பறந்து கொண்டிருந்தனர்.

எல்லோரது முகத்திலும் ஏமாற்றம். அசடு வழிந்த முகத்துடன் அனைவரும் பழைய இடங்களுக்குத் திரும்பி வந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்தது சாவகச்சேரி நகரில். [ஒ-117]

# மாங்குளம் முகாம் தகர்ப்பு; நாளை வெற்றி நாள்

யாழ்ப்பாணம், டிச 21

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றி நாளும், கரும்புலி லெப்டினன்ட் கேர்ணல் போர்க்கின் நினைவு நாளும் நாளை ஈழப் பகுதி எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த நாளை உணர்வு பூர்வமாகக் கொண்டாட சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதனை ஒட்டி விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" பத்திரிகை கரும்புலி போர்க்கின் உருவப் பட இணைப்புடன் நாளை வெளியாகின்றது.

இந்த இதழில் வன்னிப் பிராந்தியத் தளபதி பால்ராஜ், மகளிர் படைப் பிரிவுப் பொறுப்பாளர் ஜெயந்தி ஆகியோரின் பேட்டிகளும், மாங்குளம் முகாமை வெற்றி கொண்ட விதமும் விவரிக்கப்பட்டுள்ளன.

மாங்குளம் தாக்குதல் பற்றிய விவரங்கள், வீரமரணமடைந்த போராளிகள், விடுதலைப் புலிகளினால் இத்தாக்குதல்களின் போது மீட்கப்பட்ட ஆயுதங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் நாளைய உதயனிலும் வெளிவரவிருக்கின்றன. [உ]

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிச. 21

வித்துவான் சைவப் புலவர் வ. செல்லையா எழுதிய "கருணை மழை பொழிந்த வள்ளல்" என்னும் நூல் வெளியீட்டு வைபவம் இன்று 21 ஆம் திகதி வெள்ளி மாலை 3 மணியளவில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது. (இ-5)

# தொண்டர் ஆசிரியருக்கு

நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்கள் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு சுய விவரங்களுடன் மேன்முறையீடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்,

இதுவரையிலும் தொண்டர் ஆசிரியர்களாகப் பாடசாலைகளில் கடமையாற்றிய பலருக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் கிடைக்காததை அடுத்து யாழ். தொண்டர் ஆசிரியர் சங்கம் தனது உறுப்பினர்களை இவ்வாறு அறிவுறுத்தி உள்ளது. [அ-5]

# வயாவிளான் தர்மப் பணம்

வயாவிளான் தபாற் கந்தோர் தற்காலிகமாக இயங்கும் ஊரெழு உபதபால் அலுவலகத்தில் வயாவிளான் பகுதி பொதுசன உதவிப் பணம் பெறுபவர்களுக்கு ஜூலை மாதக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. (இ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### 90; தந்த திருப்பம்

1990, இன்னும் பத்து நாட்களில் நிறைவுறுகிறது. சர்வதேச அரசியல் அரங்கில், நினைத்துப் பார்த்திருக்காத திருப்பங்களையும், மாற்றங்களையும் கொண்டு வந்த பெருமை இந்த ஆண்டுக்கே உரியது. ஆம்; இவ்வருடம் மே மாதம் தொடக்கம் ஜூன் 4 வரை சோவியத் தலைவர் மிக்கெயில் கோர்பச்சேவ் அமெரிக்காவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது உருவான பிரகடனம் சர்வதேச அரசியலில் புதிய பின்புலம் ஒன்றைத் தோற்றுவித்திருக்கிறது.

★ அமெரிக்க-ரஷ்ய யுத்தத்தைத் தவிர்ப்பது.
★ அவை இரண்டும் இராணுவ மேலாண்மையை நிலைநாட்ட முயற்சிக்காதிருத்தல்.
★ இனி எப்போதுமே, எந்த சந்தர்ப்பத்திலுமே அணு ஆயுதப் போரை தொடங்குவதில்லை- என்ற மூன்று முக்கிய அடிப்படை அம்சங்களுடன் கூடியது அந்தப் பிரகடனம்.

அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையேயான பகைமையையும் போட்டியையும் நீக்கி, முரண்படுவதற்குப் பதிலாக, மோதுவதற்குப் பதிலாக நம்பிக்கை, ஒத்துழைப்பு என்ற அடிப்படையில் புதிய வகை உறவை வலுப்படுத்தி நெருக்கமாக நின்று பணிபுரிவதென இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கம் கண்டனர்.

உலகின் அரசியல், பொருளாதார மாற்றங்களை- முன்னேற்றங்களை தனித்தனியே பிரிந்து நின்று நோக்காமல், இருவரும் பங்காளிகள் என்ற நிலையில் பார்ப்பது என்றும் அவர்கள் இணங்கிக் கொண்டனர்.

மொத்தத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான "கெடுபிடி யுத்தத்தை" இல்லாமற் செய்வதற்கு 1990 வித்திட்டிருக்கிறது. சோவியத் தலைவர் கோர்ப்பச்சேவின் 'பெரெஸ்ரொய்க்கா'வே (சமூகச் சீர்திருத்தமே) இந்தப் புதிய திருப்பத்துக்கும் போக்குக்கும் மூலாதாரம் எனில் மிகையல்ல.

மோல்டா பிரகடனம் சர்வதேச அரசியலில் உடனடி மாற்றங்களைக் கொண்டு வந்திருப்பதைக் கண்ணாரக் காண்கின்றோம். இன்று நேற்றைய து அல்ல என்ற நிலை வந்துள்ளது.

எனினும் பிராந்தியப் பிரச்சினைகளை, முரண்பாடுகளைத் தீர்ப்பதில் உத்தேச அமெரிக்க-சோவியத் பங்காளர் உறவுத் தத்துவம் எவ்வாறு பயன்படும்? இன்னும் அது வெளிச்சமாகத் தெரியவில்லை. மத்திய அமெரிக்கா, ஆப்கானிஸ்தான், மத்திய கிழக்கு, கம்போடியா, கொரியா, தென்னாபிரிக்கா, சைபிரஸ் ஆகியவற்றின் பிரச்சினைகள் சந்தேகக் கேள்வியையைப் பலமாக எழுப்புகின்றன.

எப்படியோ, அமெரிக்க-ரஷ்ய நட்பு உலக மக்களின் அரசியல், பொருளாதாரத் துறைகளில் மாற்றங்களை உண்டாக்கும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் அந்த மாற்றங்கள் பயனுள்ளவையாக இருக்குமா, பாதகமானவையாக இருக்குமா என்பதற்கு காலமும் அதன் நிகழ்வுகளும் தான் பதில் சொல்லும்.

வி—

## இப்படியும் ஏமாற்று பேர்வழிகள்

தென்மராட்சி, டிச. 21

இயக்கத்தின் பெயரைச் சொல்லித் தேங்காய் வாங்கிய ஓர் ஏமாற்றுப் பேர்வழி மிகுதிப்பணத்துக்கு முகாமுக்கு வருமாறு கூறிச்சென்றறாராம்.

மாலையில் முகாமுக்கு சென்றபோதே ஏமாந்து போனவிடயம் தெரியவந்ததாக பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார்.

விடத்தற்பளை, உசன் பகுதிகளில் இப்படியானவர்கள் நடமாடுகின்றனர் என்று கூறப்படுகிறது. (இ-117)

# வவுனியாவில் வயல்களுக்கு செல்ல விவசாயிகள் அச்சம்

## பராமரிப்பு இன்றி விவசாயம் பாதிப்பு

வவுனியா, டிச. 21

வவுனியா மாவட்டத்தில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளால் பயிர்களைப் பராமரிக்க முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். வயல்களுக்குச் செல்ல விவசாயிகள் அஞ்சுகின்றனர்.

இதனால் கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழித்து வருகின்றன.

வவுனியா மாவட்டத்தில் உள்ள மொத்த விவசாயக் காணிகளில் எட்டில் ஒருபகுதி நிலத்தில் மட்டுமே விவசாய முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

உரம், எரிபொருள், விதை நெல் போன்றவை சரியான முறையில் கிடைக்காத போதிலும், பல சிரமங்களுக்கு மத்தியில் விவசாய முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர்.

இராணுவ நடவடிக்கைகளால் தற்சமயம் விவசாயிகள் தமது வயல்களுக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. [இ-3-164]

## குருநகர் மக்களுக்கு விசேஷ உணவு நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

குருநகர், டிச. 21

இராணுவ நடவடிக்கைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குருநகர் மக்களுக்கு விசேஷ உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

யாழ். அரசஅதிபர் ஊடாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் இவ்வாறு கேட்டுள்ளது:

மேற்படி சங்கச் செயலாளர் எஸ். தவரெட்ணம் கையொப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"யுத்தத்தினால் எமது கிராமம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. விமானக்குண்டு வீச்சு, ஷெல், பிரங்கித்தாக்குதல்களால் மக்கள் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்டு அகதிகளாகப் பல்வேறு இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அகதிகளாக வாழும் இடங்களில் தொழில் செய்யமுடியாத அளவுக்கு எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சிறிய தாங்கு வள்ளங்களில் மீன் பிடிக்கச் சென்ற எமது கிராமத்து மீனவர்கள் விமான, கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறிய தொழிலையும் செய்ய முடியாத அளவுக்கு பயம் சூழ்ந்த எமது மக்கள் அகதி முகாம்களிலும், கடற்கரை ஓரங்களிலும் முடங்கிக் கிடக்கிறார்கள்.

வறுமையின் பிடியில் சிக்கியுள்ள அவர்கள் பட்டினிச் சாவை அண்மித்து விட்டனர்.

இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-15)

## யூனியன் கல்லூரி மீண்டும் இடம் மாற்றம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கடந்த வாரம் முதல் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் இயங்கி வருகிறது. இதற்கு முன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தற்காலிகமாக மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இயங்கி வருகிறது. (இ-89)

## முத்திரை வரவில்லை

சுன்னாகம் தபாலகத்துக்கு கப்பலில் இருந்து வந்த தபால் பொதிகளில் முத்திரைகள் இருக்கவில்லை என்று சுன்னாகம் தபாலதிபர் தெரிவிக்கிறார். (இ)

## தனியார் கல்வி நிறுவனக் கூட்டம்

யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் பொதுச் சபைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-1)

## ஆசிரியர்களுக்கு காசோலையாகவே சம்பளம்

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான நவம்பர் மாதச் சம்பளம் காசோலையாகவே வழங்கப்பட்டு வருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் இருந்து கட்டு நிதி கிடைத்ததை அடுத்து காசோலைகள் கோட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன. (இ 3)

## நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலை தீவிரம்!

யாழ்ப்பாணம், டிச. 21

யாழ் மாவட்டத்தில் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலையை மிருக வைத்திய பிரிவு சுறுசுறுப்பாக மேற்கொள்ளவிருக்கிறது.

இதற்குத் தேவையான தடுப்பு மருந்தை பிராந்திய சுகாதாரத் திணைக்களம் பெற்றுக் கொடுக்கும் என சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை தெரிவித்தார்.

எட்டு வார காலத்தில் குடாநாட்டு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் திட்டம் பூர்த்தி செய்யப்படும் என்றும்—

வாரம் தோறும் சுமார் ஆயிரம் "டோஸ்" தடுப்பூசி ஏற்றப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-6)

## காங்கேசன் சிமெந்து ஆலை: நவீனமயப்படுத்த முயற்சி

காங்கேசன் துறையிலுள்ள இரண்டு சிமெந்து ஆலைகளையும் நவீனமயப்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பது சம்பந்தமான பேச்சுக்கள் கொழும்பில் நடைபெற்றன.

சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த "ஹெலிவாங்" நிர்வாக ஆலோசனை நிறுவனம் இந்த விடயம் சம்பந்தமாக ஆராய்ந்து வருகிறது.

காங்கேசன்துறை கூட்டுத்தாபன, லங்கா சிமெந்து நிறுவன அதிகாரிகளுடன் அந்த நிறுவனப்பிரதிநிதிகள் பேச்சு நடத்தினர்.

மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் குறித்து இந்த அமைப்பு அறிக்கை சமர்ப்பிக்கும் என்றும், வெளிநாட்டு உதவியுடன் இரு ஆலைகளும் நவீனமயப்படுத்தப்படும் என்றும் காங்கேசன் சிமெந்து கூட்டுஸ்தாபன பொதுமுகாமையாளர் திரு. ஞானபண்டிதன் தெரிவித்தார்.

காங்கேசன் சிமெந்து ஆலை அதிகாரிகள் சமீபத்தில் கொழும்புக்கு அழைக்கப்பட்டபோது, சிமெந்து உற்பத்தியை மீண்டும் ஆரம்பிப்பது பற்றி ஆராயவே அவர்கள் அழைக்கப்படுவதாக முதலில் நம்பப்பட்டது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சிமெந்து உற்பத்தி தற்போது நிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-3)

# நெடுந்தீவில் மீன்பிடி பாதிப்பு

## வெளியூர் மீனவரும் இம்முறை இல்லை

நெடுந்தீவில் மீன்பிடித் தொழில் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது. கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதே இதற்குக் காரணம்.

நெடுந்தீவுக் கடலில் கடற்படைப் படகு ஒன்றும் நங்கூரமிட்டுள்ளது.

வழமைபோன்று இம்முறை வெளியிடங்களில் இருந்து மீனவர் எவரும் நெடுந்தீவுக்கு வரவில்லை. (இ-111)

## திருடர்கள் தப்பிச் செல்ல வண்டிக்காரர் அகப்பட்டார்!

திருட்டுத்தனமாக பிடுங்கிய மரவள்ளிக்கிழங்கை ஏற்றிச் செல்வதற்கு உபயோகிக்கப்பட்ட மாட்டுவண்டி விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

நவக்கிரியில் கதிரவேல் குகவேல் என்பவருடைய தோட்டத்தில் இருந்த மரவள்ளிக்கிழங்கை திருடர்கள் பிடுங்கி கிழங்கையும், மரவள்ளிக்கட்டைகளையும் வண்டி ஒன்றில் ஏற்றிச்சென்றனர்.

திருட்டு இடம்பெற்ற இடத்திலிருந்து சுமார் 12 மைல் தொலைவிலுள்ள மந்துவில் பகுதியிலிருந்தே மாட்டுவண்டி கொண்டுவரப்பட்டிருந்தது.

இறுதியில் திருடர்கள் தப்பி வண்டிக்காரர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

திருடர், தமது சொந்தக் கிழங்கைப் பிடுங்கவே செல்வதாக, தம்மிடம் கூறியதாக வண்டிக்காரர் தெரிவித்தார்.

அதேசமயம் இப்பகுதியில் தென்னை மரங்களில் இரவோடிரவாக இளம் தேங்காய்கள் வெட்டிச் செல்லப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது. (இ-15)

## சிரமதானம்

சிரமதானம் மூலம் யாழ். போதனா வைத்தியசாலை வளவுச் சுற்றுப்புறங்கள் துப்புரவு செய்யப்பட்டன.

இந்த சிரமதானப்பணியை யாழ்ப்பாண ரயில் நிலைய ஊழியர்கள் மேற்கொண்டனர். (இ-12)

## தெல்லிப்பழை உ. அ. அதிபர்

யாழ். செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றும் திரு. க. நடராஜா எதிர் வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெறுகிறார். (இ-5)

## கசிப்பு வேட்டை

ஏழாலை மத்தியில் அமைந்துள்ள அம்மன் கோவிலடியில் இரவு ஏழு மணி அளவில் நடத்தப்பட்ட கசிப்பு வேட்டையின் போது, கசிப்பு கைப்பற்றப்பட்டு, தரையில் ஊற்றப்பட்டது.

மல்லாகம் பிரதேசப் பொறுப்பாளரின் உதவியுடன் அப்பகுதி இளைஞர்கள் இந்த கசிப்பு வேட்டையை நடத்தினர். (இ-86)

## எம். ஜி. ஆர். நினைவு தினம்

யாழ்ப்பாணம், டிச. 21

எம். ஜி. ஆரின் நினைவு கூர்வதற்கான நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இலங்கை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்துள்ளது.

அதன் பொருட்டு எம். ஜி. ஆர். பணி மன்றங்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் தாவடியில் உள்ள கழக அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டு ஏற்பாடுகள் குறித்து ஆராயப்படுவதாக, கழக வட்டாரங்கள் தெரிவித்தன. [அ]

## உலகச் செய்திகள்

### பிரச்சினைக்குரிய அப்பதவிக்கு ஜப்பானிய பெண்

அகதிகள் மறுவாழ்வுக்கான ஐ.நா. தூதுவராக (Unher) ஜப்பானியப் பெண் ஒருவரை ஐ.நா. பொதுச் செயலாளர் நியமித்திருக்கிறார்.

இவரின் பெயர் திருமதி யசோகி ஒகாதோ

இந்தியரான திரு. வீரேந்திர தயாள் என்பவரை இப் பதவிக்கு நியமிக்க ஐ நா. பொதுச் செயலாளர் முன்னர் சிபார்சு செய்திருந்தார். அவரின் நியமனத்திற்கு பல ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

ஐ.நா. அகதிகள் தூதராலயத்திற்குத் தேவையான நிதிகளை ஐரோப்பிய நாடுகளிடமிருந்து பெறக்கூடிய ஒருவரையே இப் பதவிக்கு நியமிக்க வேண்டும் என்றும் அந்த நாடுகள் கூறியிருந்தன.

அதனைத் தொடர்ந்து திரு. தயாள் தனது நியமனத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார். [இ-எ]

### கோர்பச்சேவ் எச்சரிக்கை

மாநிலக் குடியரசுகளின் நெருக்கடி அதிகரிப்பின் நேரடி ஆட்சியின் கீழ் அவற்றைக் கொண்டுவரப் போவதாக சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் எச்சரித்திருக்கிறார்.

### பங்களாதேஷில் பெப்: 27 இல் பொதுத் தேர்தல்

டாக்கா, டிச 21

பங்களாதேஷின் ஐந்தாவது பொதுத் தேர்தல் முன் கூட்டியே நடத்தப்படவுள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மார்ச் 2 ஆம் திகதிக்கு பதிலாக பெப்ரவரி 27 ஆம் திகதியன்று பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று பங்களாதேஷ் காபந்து அரசு அறிவித்து உள்ளது.

300 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் இத் தேர்தலில் 6 கோடி 20 லட்சம் மக்கள் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

### எர்ஷாத்தை விசாரிக்க கமிஷன்

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் செய்தது தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க மூன்று பேர் கொண்ட விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. அதன் தலைவராக உயர் நீதிமன்ற நீதியரசர் அன்சாருதீன் நியமிக்கப்பட்டார். (இ-எ)

### மரண தண்டனை பிரேரணை தோல்வி

லண்டன், டிச. 21

மீண்டும் மரண தண்டனையை அமுலுக்குக்கொண்டு வரக் கோரும் பிரேரணையை பிரிட்டிஷ் நடாளுமன்றம் 185 பெரும்பான்மைவாக்குகளால் நிராகரித்தது.

26 ஆண்டுகளுக்கு முன்னர் கொலைக்குற்றம் செய்த ஒரு நபருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அதன் பின்னர் மரணதண்டனை விதிக்கும் சட்டம் ரத்துச் செய்யப்பட்டது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுத்தமான வேப்பெண்ணெய் மருத்துவ தேவைக்கும் பயிரைத் தாக்கும் பீடைகள் ஒழிக்கவும் சிறந்தது. போத்தல் ரூபா 80/- திருநெல்வேலி, இணுவில், யாழ்.நகர் நவீன சந்தை, அன்னை கோப்பி கடைகளிலும் கிடைக்கும். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

(C/5552)

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 456 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

### மலிவு விற்பனை

பழைய,புதிய வீட்டுத் தளபாடங்கள், மற்றும் சகல வீட்டுப் பாவனைப் பொருள்கள், எலக்றிக் பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் உடுப்புகள், தையல் மெசின்கள் நத்தார் தினத்தை முன்னிட்டு மலிவு விலையில் விற்பனைக்குண்டு. இடம் பிறைக் ஒக்ஷன் சென்ரர், 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (15183)

### உடன் தேவை

பெண்கள் குழந்தைகள் ஆகியோரது சகல உடைகளையும் நாகரிகமான முறையில் [வெட்டி தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த பெண் தேவை. நேரில் வரவும், 'திருமகள் றேடர்ஸ்' (கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட்முன்) கல்வியங்காடு. (15185)

### Wanted Audit/ Accounts Trainees

Those who have Passed the G. C. E (A/L) with Accounts as a Subject could Apply. Apply Immediatley to Accounting Systems & Services [Jaffna] Ltd 484/1, Hospital Road, Jaffna. [15175]

### அறிவித்தல்

கட்டுவன் மேற்கு வேதக் கோயிலுக்கு அண்மையில் வசித்த செ. ஜெயராசனின் மனைவி ஜெ. சுசிலாவும், பிள்ளைகள் இருவரும் இடம் பெயர்ந்த விலாசம் தெரியவில்லை. தகவல் அறிந்தவர்கள் இந்த முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:- B. Gnanachandran, C/o. M. A.Perera, 137, U. C. Quarters, New Town, Anuradhapura. (15171)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். ஞாயிறு விடுமுறை. (15153

### வாடகைக்கு

யாழ். கச்சேரி வடக்கு ஒழுங்கையில் உள்ள 25ஆம் இலக்க வீட்டில் ஒரு பகுதி [ஒரு குடும்பம் வசிப்பதற்கு போதிய வசதியுள்ள] வாடகைக்கு கொடுக்கப்படவுள்ளது. விபரங்களுக்கு சு. தம்பித்துரை 8/2, பேரின்பநாயகம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [15177]

### கம்பியூட்டர் வகுப்புக்கள்

Basic புதிய வகுப்புக்கள் 19-12-90 [திங்கள், புதன், வெள்ளி] 22-12-90. [சனி, ஞாயிறு] ஆரம்பமாகின்றன. மேலதிக விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Centre 37, Clock Tower Road, Jaffna. (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்). (15149)

### கடிகாரம் திருத்துனர் தேவை

சகலவித கடிகாரங்களும் திருத்துவதில் அனுபவம் மிக்கவர்கள் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் தொடர்புகொள்ளவும். டவர் வோச் வேக்ஸ், 11 யுபிலி பஜார், யாழ்ப்பாணம் (ராணி சினிமா அருகாமை] (15169)

### தவறிவிட்டது

19 - 12 - 90 அன்று சுண்டுக்குளிக்கும் உதயன் பணிமனைக்கும் இடையில் மண் நிற உறையுடன் மூக்குக் கண்ணாடி தவறி விட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (15187)

## 4-வது வருட நினைவஞ்சலி



### திருமதி பஞ்சாட்சரம் சிவப்பிரகாசம் (இச்சி)

தோற்றம்:- 11 - 2 - 1923

மறைவு:- 3 - 1 - 1987

திதி:- 21 - 12 - 1990

ஆண்டுகள் பல சென்றாலும் நிலைத்திருப்பீர் எங்கள் நினைவில்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

"சிவாட்சரம்" உரும்பிராய் கிழக்கு உரும்பிராய். (15160)

---

தொழில்நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்

## 1991 ஆம் கல்வி ஆண்டுக்கான மாணவர்களை அனுமதித்தல்

1990-09-28 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்பட்ட இக்கல்லூரியின் சகல பயிற்சி நெறிகளுக்கும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 1990-12-28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியும் 1990-12-28 ஆகும்.

சி. இராஜேந்திரா
அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1990-12-18 [சி/5548]

---

குதூகலமான

## ★ குருத்துவ வெள்ளிவிழா ★

வெள்ளிகள் நடுவே நன்கு
விளங்கிடும் நிலவைப் போல
உள்ளமாம் வானந் தன்னில்
உறைபவர் யேசு நேசன்
மல்லிகை மலரைப் போலும்
மணம் கமழ் ரோஜா போலும்
கள்ளென மயக்கும் இன்பக்
கவிதையும் போலு மாவார்!

குரு அவர் யேசு தேவன்
குறித்த நல் வழியிற் செல்லும்
திருமகன் மக்கட் கெல்லாம்
தீபமாய் ஒளிரும் சான்றோன்
பெருமகன் யேசு நேசன்
பிறப்பிது அரிதே ஆகும்
வரு மொரு கால மெல்லாம்
வளமுடன் வாழ வேண்டும்!

துறவற வாழ்வில் நல்ல
தூய்மையே கவசமானோன்
அறவழி தன்னில் நித்தம்
அகமதைச் செலுத்தும் ஆயன்
பிறவழி ஏதும் நாடார்
பெருந்தவ வாழ்க்கை வாழும்
இறையவன் தொண்டன் வாழ்க
இரு கரம் குவித் தோம் நாமே!

உயிரியல் பிரிவு ஆசிரியர்கள்,
புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:- 15 — 9 — 1921

உதிர்வு:- 21 — 11 — 1990

### திருமதி செபஸ்தியம்மா யோகரட்ணம் சந்தியாப்பிள்ளை

அன்னையே செபஸ்தியம்மா யோகரட்ணம்; பேத்தி யாரே!
இன்றுடன் இறைபதத்தைச் சேர்ந்தொரு மாத மாச்சு;
அன்று நீ, வாழ்ந்துரைத்து அறம்பல விந்துதந்த
நன்று சொல் வாக்கும் நல்ல செயல்களும் இதயத்தூடு
குன்றின்மேல் விளக்காய்நின்று குவலயத்திருத்தி யெம்மை
பண்புடை மக்களாக்கும் பக்குவந் தமையெம் மால்.
என்றுமே மறக்கொணாது இதயத்து இருத்தியென்றும்
உன்னையே நினைக்கச் செய்யும்; உனக்காக வேண்டிக்கொள்ளும்;

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

466/2B அச்சுவானிபார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (15189)

---

வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை
சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகை

## கேள்வி அறிவித்தல் - 1991

மேற்படி விடயம் சம்பந்தமாக 06-12-1990 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் வெளியான எமது 30-11-1990 ஆம் திகதிய அறிவித்தலுக்கு மேற்றொடர்பாக, 1991க்கான கேள்வி அறிவித்தலுக்குரிய கேள்விப்பத்திரங்கள் வழங்கும்திகதி, 28-12-1990 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி, 28-12-1990 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரையும் நீடிக்கப் பட்டுள்ளது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

வை. இராசையா
விசேட ஆணையாளர்.

வலி.வடக்கு பிரதேசசபை,
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். 18-12-1990 (சி/5550)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**செ. ரவீந்திரன்** (தம்பா) — **சி. முரளிதரன்** (முரளி)

(சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்கள்)

அன்னை மடியில்: 18 - 05 - 1970 — அன்னை மடியில்: 14 - 07 - 1970

அன்னிய இராணுவ அழிப்பு
21 — 12 — 1988

ஆண்டிரண்டோடி மறைந்தன எனினும் மாண்டதும் பிரிவோ மாய்க்குதே மனமதை, நீங்கள் தரணி வாழ்வில் படைத்திட்ட சாதனை புரட்சி பரணி பாடிடும் நண்பர் வாழ்வில்

நண்பர்கள்.

சுழிபுரம். (15188)

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 24 - 06 - 1961

தாயக மண்ணில்: 21 - 12 - 1985

### மேஜர் அல்பேட்
**கந்தையா ரூபதநிதி**

தாயக மண் மீட்புக்காய் திரமுடன் போராடி வீரமரணமடைந்து ஐந்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் நீ உருவாக்கிய தரமான இளம் வேங்கைகள் உன் தமிழ் ஈழ கனவை நனவாக்கும் என்ற உறுதியுடன் உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

என்றும் உன் அன்பை சுமந்து நிற்கும்:
**பெற்றோர், சகோதரர், அண்ணிமார், உறவினர்கள், நண்பர்கள்.**

அல்பேட் வீதி,
அச்சுவேலி. (15142)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org